# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 201/பேரூ/2024**

**நாள்: 08.04.2025**

| | | |
|---|---|---|
| திரு. M. அய்யனார்,<br>கோம்பை,<br>தேனி மாவட்டம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி,<br>தேனி மாவட்டம் | --- | எதிர்மனுதாரர் |

தேனி மாவட்டம், கோம்பை, உத்தமபாளையம் தாலுக்கா, ஒடைத் தெரு, கதவு எண் 28A என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. அய்யனார் என்பவரின் 21.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.10.2024 அன்று பெறப்பட்டு 201/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தேனி மாவட்டம், கோம்பை, உத்தமபாளையம் தாலுக்கா, ஒடைத் தெரு, கதவு எண் 28A என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. அய்யனார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கோம்பை, உத்தமபாளையம் தாலுக்கா, ஒடைத் தெரு, கதவு எண் 28A என்ற விலாசத்தில் வசிக்கும் M. அய்யனார் ஆகிய நான், எனது பகுதி 13வது வார்டில் ஒடைத் தெருவில் நடைபாதை பணி தரமில்லாமல் சரிவர செய்யப்படவில்லை எனவும், பேவர் பிளாக் சாலை பழுதுடன் இருக்கிறது" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.11.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.02.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சியில் வார்டு13, ஓடைத் தெருவில் ஓடைக்கரையில் வசிக்கும் பொதுமக்கள் நடைபாதை பயன்பாட்டிற்காக 2011-12ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் கோம்பை பேரூராட்சியின் வார்டு 13, ஓடைத் தெருவில் வடிகாலின் மேற்பகுதியில் கவர்சிலாப் அமைத்து நடைபாதை ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் புகாரின் அடிப்படையில் நடைபாதை பழுது நீக்கம் செய்யப்பட்டது அவ்வப்போது ஏற்படும் பழுதினை நீக்கம் செய்யப்பட்டது.

தற்போது, 2022-23 ஆம் ஆண்டு மாநில பகிர்வு நிதித் திட்டத்தின் கீழ் மேற்படி நடைபாதை முழுவதுமாக சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் சாலை பணிகள் அனைத்தும் உயர் அலுவலர்களின் கண்காணிப்பில், அளவு மேலளவுகள் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் பணிகள் தரமில்லாமலும், முழுமை பெறாமலும் போடப்பட்டுள்ளது என குறிப்பிடுவது உண்மைக்கு புறம்பானது என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பிக்கிறேன்.

வார்டு 14 கவுண்டமார் தெருவில் 2011–2012 ஆம் ஆண்டு பொது நிதித் திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டது. மேற்படி தெருவில் இருக்கும் குடியிருப்பு வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பொழுது, பேவர் பிளாக் சாலையில் பழுது ஏற்பட்டுள்ளது. தற்போது பேவர் பிளாக் சாலையில் பழுதுகள் அனைத்தும் சரி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பிக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும் மற்றும் எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரையும் 25.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. M. அய்யனார் 25.02.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. இருப்பினும், மனுதாரருக்கு, இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்ததின் காரணமாக நேரில் ஆஜராகவில்லை என்பதால், 25.02.2025 நாளிட்ட ஈமெயில் மூலம் அனுப்பப்பட்ட தனது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ள எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"நான் எனது 21.10.2024 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள புகைப்படங்களை ஆதாரமாக முறையீட்டு மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

நான் புகார் கூறிய கவுண்டமார் தெருவில் இரண்டு பகுதிகள் சரிசெய்யப்பட்டுள்ளது. எஞ்சிய ஒரு பகுதி சரி செய்யவில்லை. அது 13வது வார்டு கவுன்சிலர் அண்ணன் வீட்டு முன்பகுதியாகும்.

மேலும், ஓடைத் தெருவில் ஓடையின் இருபுறமும் பணி மிக மிக மோசமாக உள்ள நடைபாதையின் மேலே பெயரளவிற்கு சிமெண்டை தடவி சென்றுள்ளனர். அதன் அடிப்பகுதி கம்பிகள் தெரிந்து மோசமாக உள்ளது.

ஆய்வு செய்த அதிகாரிகள் செய்யப்பட்டுள்ள பணி மக்களுக்கானதா இல்லை. கட்டுமான ஏலதாரருக்காக ஆய்வு செய்தார்களா என்பது புரியவில்லை. ஒரு வேளை மக்களுக்காக ஆய்வு செய்திருந்தால் ஓடைத் தெருவில் நடைபாதையின் அடியில் பெயர்ந்துள்ள கம்பிகளை கண்டு பணியில் திருத்தம் செய்ய உத்திரவிட்டிருப்பார்கள். எனவே ஓடைத் தெருவில் நடைபெற்ற பணியை மறு ஆய்வு செய்து பணியை

முறைப்படுத்தவும், தவறு நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுத்து எனக்கான நீதியை பெற்றுத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறன்.'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. சுருளிவேல் என்பவர் 25.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"(1) <u>வார்டு 13ல் ஒடைத் தெருவில் உள்ள நடைபாதை பணி தரமின்மை என்கின்ற புகார் குறித்து:-</u>

- 2011-12ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் கோம்பை பேரூராட்சியின் வார்டு 13, ஒடைத் தெருவில் வடிகாலின் மேற்பகுதியில் கவர்சிலாப் அமைத்து பொதுமக்கள் நலன் கருதி நடைபாதை அமைக்கப்பட்டது. அவ்வப்போது ஏற்படும் பழுதினை நீக்கம் செய்யப்பட்டது.
- ஆனால், 2022-23ஆம் ஆண்டு மாநில பகிர்வு நிதித் திட்டத்தின் கீழ் மேற்காணும் நடைபாதை முழுவதற்கும் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டு, அதன் தரத்தை இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் உறுதி செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக்
- கொள்கிறேன்.

(2) <u>வார்டு 14, கவுண்டமார் தெருவில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை பழுது உள்ளது என்கின்ற புகார் குறித்து:-</u>

- 2011-12ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் வார்டு 14, கவுண்டமார் தெருவில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையானது, அத்தெருவில் உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும்போது பழுது ஏற்பட்டது, தற்போது அப்பழுது சரி செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

எனவே, மேற்காணும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட இரண்டு புகார்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சரிசெய்யப்பட்டுள்ளன. இதற்கு ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கோம்பை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

8. மனுதாரர் தனது 21.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சி, 13 வது வார்டில் நடைப்பெற்ற சாலைப் பணிகள் தரமில்லாமலும் முழுமை பெறாமலும் போடப்பட்டுள்ளது எனவும் மற்றும் 14வது வார்டிலுள்ள கவுண்டமார் தெருவில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது எனவும் புகார் தெரிவித்துள்ளார்.

2011–12 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் கோம்பை பேரூராட்சியின் வார்டு 13, ஒடைத் தெருவில் வடிகாலின் மேற்பகுதியில் கவர்சிலாப் அமைத்து பொதுமக்கள் நலன் கருதி நடைபாதை அமைக்கப்பட்டது என்பதையும், அவ்வப்போது ஏற்படும் பழுதினை நீக்கம் செய்யப்பட்டது எனவும், 2022-23ஆம் ஆண்டு மாநில பகிர்வு நிதித் திட்டத்தின் கீழ் வார்டு 13ல் ஒடைத் தெருவில் உள்ள நடைபாதை முழுவதற்கும் சிமெண்ட் சாலையாக

அமைக்கப்பட்டு, அதன் தரத்தை இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும், 2011–12 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் வார்டு 14, கவுண்டமார் தெருவில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையானது, அத்தெருவில் உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும்போது பழுது ஏற்பட்டது எனவும், தற்போது அப்பழுதினை சரி செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது எனவும் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்படங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

ஆனால், மனுதாரர் தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் தனது முறையீட்டு மனுவில் புகாராக தெரிவித்துள்ள கவுண்டமார் தெருவில் இரண்டு பகுதிகளுக்கு மட்டும் சாலை சரி செய்யப்பட்டு, எஞ்சிய ஒரு பகுதி சரி செய்யப்படவில்லை எனவும், ஓடைத் தெருவில் ஓடையின் இருபுறங்களிலும் நடைபாதைகளில் பெயரளவுக்கு சிமெண்ட் பூசி உள்ளனர் எனவும், நடைபாதையின் அடிப்பகுதி கம்பிகள் தெரியும் வண்ணம் உள்ளது என புகாராக தெரிவித்துள்ள நிலையில், பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விளக்கங்களுக்கு முரண்பாடாக உள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மேற்காணும் நிலையில், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13–ல் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பாதை செப்பனிடும் பணியினை சரிவர செய்யப்பட்டுள்ளனவா என்பதற்கான உண்மைத் தன்மை அறியும் வகையில், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் மூலம் நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. M. அய்யனார்,
28A, ஓடைத் தெரு,
உத்தமபாளையம் தாலுக்கா,
கோம்பை–625 522,
தேனி மாவட்டம்.
(கைபேசி எண்.8870102481)

(2) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

(3) செயல் அலுவலர்,
கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம்

(4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.